# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப. (ஓ)

முறையீட்டு மனு எண். 103/மா/2017

ஆணை எண். 142/2017

நாள் : 13/06/2017

திரு மு. கிருஷ்ணமூர்த்தி,
திருச்சிராப்பள்ளி – 3

– முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி.

– எதிர் மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, உறையூர், 97, கம்நாயக்கன் தெருவைச் சேர்ந்த திரு மு. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் 28.04.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 02.05.2017 அன்று பெறப்பட்டு, 103/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப் படுகிறது :-

## ஆணை

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, உறையூர், 97, கம்நாயக்கன் தெருவைச் சேர்ந்த திரு மு. கிருஷ்ணமூர்த்தி என்பவர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ அபிஷேகபுரம் கோட்டம், உறையூர் பகுதியில் உள்ள காய்கனி சந்தை வளாகத்தில் மாற்றுத்திறனாளியானத் தனக்கு 5'x6'பரப்பளவில் இட ஒதுக்கீடு செய்து தருமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் உட்பட பிற அலுவலர்களுக்கும் முகவரியிட்ட மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

2. தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களுக்குத் தாக்கல் செய்யப்படும் முறையீட்டு மனுக்களை, 2015–ஆம் ஆண்டு, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் (குற்றச்சாட்டு தாக்கல், விசாரித்தல் மற்றும் முடித்தல்) விதிகளில், விதி–4ன் படி, குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் கட்டணமாக ரூபாய் பத்துக்கான நீதிமன்ற வில்லையுடன் தாக்கல் செய்யப்பட வேண்டும். மேற்குறிப்பிட்ட விதியின்படி மனுதாரர் முறையீட்டு மனுவினைத் தாக்கல் செய்யாததால், அவரது மனு குறைபாடான மனு எனக் கருதப்பட்டு நிராகரிக்கப்படுகிறது. மேலும், மனுதாரரின் முறையீடு இம்முறைமன்ற நடுவத்தின் விசாரணைக்கும் உகந்தது அல்ல எனவும் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017– ஆம் ஆண்டு ஜூன் திங்கள், 13–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. **திரு பு. கிருஷ்ணமூர்த்தி,**
   **97, கல்நாயக்கன் தெரு,**
   **உறையூர்,**
   **திருச்சிராப்பள்ளி – 3.**

2. **ஆணையர்,**
   **திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,**
   **திருச்சிராப்பள்ளி.**

நகல் : **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,**
**பேரூராட்சி பிரிவு –3,**
**இ.கோ. / உதிரிகள்**